**Santhy Arulanatham**

# "வட இலங்கையின் புராதன துறைமுகங்களும் அவற்றின் பண்பாட்டுச் செல்வாக்குகளும்"

**Senior Lecturer, Department History, University of Jaffna (email: ssuthayan@yahoo.com)**

**திறவுச் சொற்கள் - (Key Words) :**

துறைமுகம், பொருளாதாரம், வர்த்தகம், பண்பாடு, தொடர்புகள்

**ஆய்வின் பின்னணி**

கி.மு 6 ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் வரலாற்றை அறிவதில் பாளி இலக்கியங்கள் பிரதான பங்கினை வகிக்கின்றன. இவ்விலக்கியங்களில் இலங்கையின் அனைத்து பாகங்களும் முதன்மைப்படுத்தப்படவில்லை. ஆனால் இவற்றில் அனுராதபுரத்திற்கு வடக்கேயிருந்த வடபகுதியானது பாளிமொழியில் நாகதீபம் எனவும் உத்தரதேசம் எனவும், தமிழ்நூல்களில் நாகநாடு எனவும் அடையாளப்படுத்தப்படுவதைக் காணலாம். வரலாற்றாசிரியர்கள் அதன் எல்லையைத் திருகோணமலையையும் உள்ளடக்கியதாகக் குறிப்பிடுவர்.

பாளி இலக்கியங்களில் அநுராதபுரம், பொலநறுவை போன்ற இராசதானிகளுக்கு மிகத் தொலைவில் இருந்த தென்னிலங்கையின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு வரலாற்றைக் கூறுமளவுக்கு அவற்றுக்கு வடக்கே கிட்டிய தொலைவில் அமைந்திருந்த வட இலங்கை பற்றி பெருமளவுக்குக் கூறவில்லையென்றே கூறலாம். ஆயினும் வட இலங்கையில் இருந்த கோகர்ன (திருகோணமலை), மகாதீர்த்த (மன்னார்), ஜம்புக்கோளப்பட்டினம் (வலிகாமம்), ஆகிய துறைமுகங்கள் ஊடாக ஏற்பட்ட மக்கள் புலப்பெயர்ச்சி, அரசியல் பண்பாட்டு உறவுகள் பற்றிப் பலசெய்திகள் இவ்விலக்கியங்களில் கூறப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். ஆயினும் அவ்விலக்கியங்கள் விரிவான தகவல்களைத் தரவவில்லை என்றே கூறலாம். இந்நிலையில் கடந்தகாலங்களில் மேற்கூறப்பட்ட துறைமுகப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல்ஆய்வுகள் இத்துறைமுகங்கள் பற்றியும், அவை அமைந்த பிராந்தியங்கள் பற்றியும் விரிவான சான்றுளைத் தருகின்றன.

தென்னாசிய நாடுகளில் இலங்கை நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு நாடாக விளங்குகின்றது. பண்டைக்காலத்தில் வெளிநாட்டவர்கள் கூடுதலாக வர்த்தகத்தின் அடிப்படையிலேயே இலங்கையை அறிந்திருந்தனர். அவர்கள் பெரும்பாலும் இலங்கையின் இயற்கைவளங்கள், துறைமுகங்கள் பற்றிக் கூறுவதைக் காணலாம். இலங்கை முக்கியமான அமைவிடத்தில் அமைந்திருந்தமையாலும், அக்காலத்தில் தேவைப்பட்ட வர்த்தகப்பொருட்களையும் பொருத்தமான துறைமுகங்களையும் கொண்டிருந்தமையாலும் அதற்குப் பிறநாடுகளுடனான தொடர்பு கொள்வதற்கு அதிக வாய்ப்பு இருந்ததெனலாம்.

பண்டைய கடல்சார் போக்குவரத்தில் பிரதானமாக அமைகின்ற துறைமுகங்களை அடிப்படையாகக் கொண்டு உலகம், நாடுகள், பிரதேசங்கள், கரையோரங்கள் என்பவற்றுக்கிடையிலான தொடர்புகள் விருத்தியடைந்திருந்தன. சிறப்பாக நாடுகளுக்கிடையிலான தொடர்புகளைப் பற்றி ஆராயந்தோர் அத்தொடர்புகளுக்கு வர்த்தகமே காரணமாக இருந்ததென்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர். அப்பின்னணியில் வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு நாடுகளின் செல்வாக்கு இலங்கையின் வடபகுதித் துறைமுகங்களினூடாகவும் நடைபெற்றன. இதனால் வர்த்தகரீதியாகவும் அதனை தொடர்ந்து பண்பாட்டு வழியாகவும் பிறநாடுகளுடன் வடஇலங்கை தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தது. இத்தகைய தொடர்புகளால் வடஇலங்கையின் வரலாறு தனித்துவம் பெற்றதாக மாறுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

துறைமுகங்கள் ஒருநாட்டின் புவியியல் அம்சமாகும். அவை இயற்கையாகவோ (திருகோணமலை) அன்றிச் செயற்கையாகவோ (கொழும்பு) காணப்படுவதுண்டு. எவ்வாறாக அமையினும் இவை வளங்களின் அடிப்படையில் ஒருநாட்டின் பொருளாதாரத்தில் பிரதான பங்கினை வகிக்கின்றன. அந்த வளங்களே வட இலங்கையின் பண்பாட்டு உருவாக்கத்திற்கும் காரணமாக இருந்தன என்பது நினைவிற் கொள்ளத்தக்க

விடயமாகும். இத்தகைய பின்னணியில் இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

பாளி இலக்கியங்களில் கூறப்படாத துறைமுகங்கள் சில வடஇலங்கையில் செல்வாக்குப் பெற்றிருந்தன. சில வெளித் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தன ( உ-ம் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை). இன்னும் சில உள்நாட்டுக்குள்ளேயே பொருட்களைப் பரிமாறுவதன் ஊடாகவும், இறங்குதுறைகளாகவும் (உ-ம் புங்குடுதீவு) வேறுசில துறைமுகங்கள் தனித்து மீன்பிடித் துறைமுகங்களாகவும் (மயிலிட்டி, நாவாந்துறை) சிறப்புற்றிருந்தன. இவற்றுள் பலவழிகளிலும் செயற்பபட்ட துறைமுகங்கள் (உ-ம் வல்வெட்டித்துறை) சிலவும் உள்ளன. வெவ்வேறு காலகட்டங்களில் சிறப்புப் பெற்றிருந்த துறைமுகங்கள் சில காலகட்டங்களில் போக்குவரத்துத் துறைமுகங்கள் என்ற தன்மையை இழந்து போனமையையும் அவதானிக்க முடிகின்றது. பண்ணைத்துறை, அலுப்பாத்தித்துறை, கச்சாய்த்துறை என்பன உதாரணங்களாகக் குறிப்பிடத்தக்கனவாகும். அவ்வவ் காலகட்ட அரசியல் சூழ்நிலைகள், வளங்களின் அருகல், தேவைகளின் வரையறை, நீரோட்டம், பருவக்காற்றுக்கள் என்பன இதில் பங்களிப்புச் செய்த காரணங்களாக இனங்காண முடிகின்றது. அநுராதபுர இராசதானி காலகட்டத்தில் பௌத்தசமயத்தின் பிரதானமான அடையாளமாகக் கொள்ளப்படும் வெள்ளரசுக்கிளை வலிகாமத்தில் அமைந்திருந்த ஜம்புக்கோளப் பட்டினம் ஊடாக சங்கமித்தை குழுவினரால் எடுத்து வரப்பட்ட நிகழ்வினை மகாவம்சத்தின் வாயிலாக அறியமுடிகின்றது. ஆனால் யாழ்ப்பாண இராசதானி காலத்தில் இத்துறைமுகம் பற்றிய செய்திகளை அறியுமாறில்லை. ஒல்லாந்தர் பருத்தி, புகையிலை போன்ற உற்பத்திகளுக்கு முதன்மையளித்தமையால் வடஇலங்கைத் துறைமுகங்கள் மும்மரமாகச் செயற்பட்டன. ஆனால் பிரித்தானியர்காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முக்கியத்துவம் பெற்றிருந்ததோடு, அவை தென்பகுதிகளிலேயே விளைவிக்கப் பட்டமையால் வடஇலங்கையின் துறைமுகங்கள் பல படிப்படியாகச் செல்வாக்கிழக்கத் தொடங்கினவெனலாம்.

வடஇலங்கையின் துறைமுகங்களில் வெளித்தொடர்புகளை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தவை அவை அமைந்திருந்த பிரதேசத்தின் வரலாற்றில், குறிப்பாக தமிழர் வரலாற்றின் வளர்ச்சிக்குக் குறிப்பிட்டளவு பங்களிப்புச் செய்துள்ளன. ஆரம்பத்தில் முக்கியமான பொருளாதார நடவடிக்கையான வணிகத்தினூடாகவே தொடர்புகள் ஏற்படுத்தப்பட்ட நிலையில் காலப்போக்கில் வெவ்வேறு தொடர்புகளாகவும் பண்பாட்டு நடவடிக்கையாகவும் பரிணமித்தமையைக் அவதானிக்கலாம். அவ்வகையில் வடஇலங்கையில் நடைபெற்ற தொல்லியல்ஆய்வுகள் (உ-ம் பூநகரி – மண்ணித்தலை ஆய்வுகள், கந்தரோடை, யாழ்ப்பாணக்கோட்டைப் பிராந்தியம் போன்றன) வடஇலங்கைத் துறைமுகங்கள் பற்றி அறிய உதவுகின்றன. அவ்வாய்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பகால வடஇலங்கையின் பொருளாதார பண்பாட்டு வளர்ச்சியில் துறைமுகங்களின் பங்களிப்பை விளங்கிக் கொள்ளவதன் பொருட்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. வடஇலங்கைத் துறைமுகங்கள் பற்றிய இவ்வாய்வு வரலாற்றுக்குப் புதிய வெளிச்சமாக அமையுமெனலாம்.

இவ்வாய்வானது யாழ்ப்பாணமாவட்டம், வவுனியாமாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், மன்னார்மாவட்டம் என்பவற்றை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படுகின்றது. கி.மு.3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை முக்கியத்துவம் பெற்றிருந்த துறைமுகங்களிலேயே 16ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த ஐரோப்பியர் (போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர்) தமது வணிகத்தளங்களையும், கோட்டைகளையும் அமைத்துள்ளதால் ஐரோப்பியர் காலத்திலும் இத்துறைமுகங்கள் முக்கியத்துவம் உடையனவாகக் காணப்பட்டன. இதனால் எமது ஆய்வின் காலம் ஐரோப்பியர் காலமவரை உள்ளடக்கியதாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

**நோக்கங்கள்**

பாளி இலக்கியங்கள் பொதுவாக இலங்கையிலிருந்த ஆதிகால இடைக்காலத் துறைமுகங்களைத் தீர்த்த அல்லது தொட்ட எனக் குறிப்பிடுகின்றன. ஆனால் வட இலங்கைத் துறைமுகங்கள் ‘பட்டினம்’ என்ற சொல்லுடன் நிறைவுறுவதைக் காணலாம். கோகர்னபட்டினம், மாதோட்டப் பட்டினம், ஜம்புக்கோளப் பட்டனம் போன்றன இதற்குச் சிறந்த உதாரணங்களாம். தமிழகத்தின் தென்கரையிலுள்ள கன்னியாகுமரியிலிருந்து ஆந்திராவிலுள்ள சித்தூர் வரை வாழ்ந்த கரையோரமக்கள் தம்மைப் ‘பட்டினத்தார்’ எனக் குறிப்பிட்டனர். சங்கஇலக்கியங்களில் பட்டினங்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. அப்பின்னணியில் ஏன் வடஇலங்கைத் துறைமுகங்கள் பட்டினங்கள் என அழைக்கப்பட்டன என்பதை ஆராய்வதும் இத்துறைமுகங்களின் பினன்னணியில் வடஇலங்கையின் வரலாற்றுப்பழமையை வெளிகொணர்வதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

வரலாற்றுஇலக்கியங்களில் சொல்லப்பட்ட துறைமுகங்களை விட வாய்மொழியாகப் பேசப்பட்ட துறைமுகங்கள் பல வடஇலங்கையில் உள்ளன. இவற்றில் சிலவற்றிக்கு நீண்டவரலாறு உண்டு. இவற்றையண்டிய பகுதிகளில் நகரங்கள் எழுச்சிபெற்று நாகரிகம் தோற்றம் பெற்றமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன. இவ்வாறான துறைமுகங்களை அடையாளங் கண்டுகொள்வது இவ்வாய்வின் ஒரு நோக்கமாகும்.
இலங்கையின் வடபகுதியில் பிற நாடுகளுடனான தொடர்புகளுக்குக் காரணமாக இருந்த துறைமுகங்களை அடையாளம் காண்பதும் அவற்றினூடாக வடஇலங்கையில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, பண்பாட்டுத் தாக்கங்களை விளங்கிக் கொள்வதும், இன்று செல்வாக்கிழந்து காணப்படும் துறைமுங்களைக் அறிவதும், எதிர்காலத்தில் இவற்றில் ஒரு சிலவற்றையாவது சிறப்பாகப் பொருளாதார ரீதியாகப் பயன்பாட்டுக்குக் கொண்டு வருவதற்குத் துண்டுவதையும் இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் வடபகுதியின் வரலாற்றுச் சிறப்பினை, வளத்தினை இப்பிராந்தியத்தில் வாழ்வோர் உணரவேண்டும் என்பதும் இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. கடந்த காலங்களில் கிருபானமுன, பெரேரா போன்ற அறிஞர்கள் வடஇலங்கைத் துறைமுகங்கள் சிலவவற்றை ஆராய்ந்திருந்தாலும் அவற்றை வடஇலங்கையின் வரலாற்றோடு இணைத்து ஆராய்ந்ததாகத் தெரியவில்லை.

பண்டைக்காலத்தில் கடல்வழித் தொடர்புகளால் இணைக்கப்பட்ட நாடுகள் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி அரசியல் பண்பாட்டு ரீதியிலும் முக்கியத்துவம் உடையனவாகக் காணப்பட்டன. கடல்வழியாக வருகை தந்த வணிகர்களும், படையெடுப்பாளர்களும் இலங்கையில் குடியேறிக் குடியிருப்புக்களை அமைத்ததோடு, கோயில்களை நிறுவியும் பண்பாட்டு வாழ்வியலைச் செம்மைப்படுத்தியும், இலங்கையின் பண்பாட்டுக்கு குறிப்பாக வடஇலங்கையின் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளமை பற்றியும் ஆங்காங்கே எடுத்துக்காட்டுவதும் இவ்வாய்வின் நோக்கத்தில் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆய்வு முறையியல்

மேற்படி ஆய்வானது பாளி இலக்கியங்களில் சொல்லப்பட்ட துறைமுகங்களையும், வெளிச்சத்திற்கு வராத ஆனால் பாரம்பரியமாக இருந்த துறைமுகங்களையும் தொல்லியல் இலக்கிய ஆதாரங்கள் கொண்டு ஆராய்வது இவ்வாய்வின் பிரதான ஆய்வுமுறையாகும். இவ்வணுகுமுறை ஊடாக வடஇலங்கையின் துறைமுகங்களை அடையாளப்படுத்துதல், இவற்றையண்டி வாழ்ந்த மக்களின் பண்பாடு, இத்துறைமுகங்களினுர்டாக ஏற்பட்ட தொடர்புகள் , அத்தொடர்புகளை ஏற்படுத்திய நாடுகள், அத்தொடர்புகளால் வடஇலங்கையின் பண்பாட்டில் ஏற்பட்ட தாக்கம் அல்லது செல்வாக்கு என்பவற்றைத் தெரிந்துகொள்வது இவ்வாய்வு முறையினது பிரதான இலக்காகும்.
பாளி இலக்கியங்களில் வரும் செய்திகள் வடஇலங்கைத் துறைமுகங்கள் ஊடான உறவுகள் பெரும்பாலும் வடஇந்தியாவுடனேயே நடைபெற்றதாகக் கூறகின்றன. ஆனால் வடஇலங்கையின் அமைவிடம் தென்னிந்தியாவின் தென்பகுதியோடு குறிப்பாகத் தமிழகத்திற்கு மிகஅருகில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்படி ஆய்வினை முன்னெடுப்பதற்கு பல்வேறு சான்றாதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றது. மகாவம்சம் போன்ற இலங்கைவரலாறு கூறும் இலக்கியங்களும், கல்வெட்டுகள், நாணயங்கள் உள்ளிட்ட தொல்லியற்சான்றுகள் போன்றனவும் ஆய்வுக்கான மூலாதாதாரங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. அதிலும் வடஇலங்கைத் துறைமுகங்கள் தமிழகத்தின் குறுக்கு நிலமாகவும் தொடக்கவாயிலாகவும் அமைந்திருந்தமையால் இலங்கையின் ஏனைய பிராந்தியங்களை விட வடஇலங்கையில் தமிழகத்தின் செல்வாக்கு மேலோங்கியிருந்ததாகக் கருதலாம். இதற்குத் துறைமுகப்பகுதிகளில் கண்டு பிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகள் பிரதான ஆதாரங்களாக அமைகின்றன. அத்துடன் இடப்பெயர்களும் இவ்வாய்வு தொடர்பில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

## பெறுபேறு.

- பண்டைய துறைமுகங்களை அடையாளம் காணுதல்
- பண்பாட்டுப் பரவலின் சாதனங்களை விளங்கிக் கொள்ளுதல்
- பண்பாட்டின் தொடர்ச்சியையும் வளர்ச்சியையும் அவதானித்தல்
- வடபகுதித் தமிழரின் வரலாற்றுத் தொடர்ச்சியை இனங்காணல்
- செல்வாக்குப் பெற்றிருந்த துறைமுகங்களின் முக்கியத்துவத்தினை அறிந்து கொள்வதால் எதிர்காலத்தில் வடபகுதித் துறைமுகங்களின் மீள்எழுச்சிக்கு உதவுதல்.

## நிறைவு

இலங்கையின் ஆரம்பகால வரலாற்றினை நோக்கும்போது வெளிநாட்டு, மற்றும் வெளிப் பிரதேசத்துத் தொடர்புகள் தனித்துப் பொருளாதார ரீதியாக மட்டும் அமையாது அவை அரசியல், சமய, பண்பாட்டு அம்சங்களின் வளர்ச்சிக்குரிய துண்டுகோலாகவும் அமைந்திருந்தன. புவியியல் ரீதியாகப் பல துறைமுகங்களைக் கொண்டிருக்கின்ற வாய்ப்பைப் பெற்றிருந்த வடஇலங்கைக்கும் இது பொருத்தமாக அமையும். இவை காலத்துக்குக்காலம் பல்வேறு தேவைகளின் பொருட்டுப் பயன்பாட்டிலிருந்து வந்துள்ளன. அக்காலங்களில் வணிகரீதியாக சிறப்பு பெற்றிருந்த இத்துறைமுகங்கள் படையெடுப்புக்களின் தளங்களாக, பண்பாட்டின் ஊடகமாக, குடியிருப்பு நகர்களாக எழுச்சி பெற்று, வடஇலங்கையின் வரலாற்று வளர்ச்சிக்குத் துணைநின்றதனை பல்வேறுபட்ட சான்றுகளின் அடிப்படையில் கண்டுகொள்ளலாம்.

## உசாத்துணை


1. Mahavamsa (1934 ) Translated by Geigar, P.T.S, London.

2. Ragupathy, Ponnamplam., (1987) Early Settlement in Jaffna, Puplished by Thilimalar Ragupahy, Madras.

3. John Cars Well and Martha Pricket., (1984) “Manthai 1980; A Preliminary Investigation” Ancient Ceylon, No.5, Journal of the Archeaological Survey Department of Sri Lanka